நாள்: 30.01.2025
OP, 23/2023
பெயர் சந்தனபிரபு
ம.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

நான் கம்பத்தில் கோம்பை ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் இருசக்கர வாகனத்தை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். மனுதாரர் அருணை எனக்கு 20 ஆண்டுகளாகத் தெரியும். மனுதாரர் அருண் எனக்கு என்ன உறவுமுறை என்பதை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மனைவியும் அவரது மனைவியும் உறவுக்காரர்கள் ஆவார்கள். நான் உழவர் சந்தை அருகில் இருசக்கர வாகனத்தை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். நானும் அவரும் ஒரே தொழில் தான் செய்து வருகிறோம். அருண் மனைவியின் தாயார் என்ன துர்போதனை சொல்லிக்கொடுத்து அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அடிக்கடி எதிர்மனுதாரரிடம் சண்டை போட்டு வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவார். அதை நான் பார்த்துள்ளேன். எந்த தேதியில் சென்று நாங்கள் சமாதானம் பேசினோம் என்பதை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் நாங்கள் சமாதானம் பேசினோம். நாங்கள் சமாதானம் பேசும்போது அவர் சின்னமனூரில் இருந்தார். நாங்கள் சமாதானம் பேசி அழைத்து வந்தோம். அவர்கள் கம்பத்தில் மறவர் மன்றத்திற்கு அருகில் குடியிருந்தார்கள். எந்த மாதம் தேதி என்று ஞாபகம் இல்லை. நான் உபயமனுதாரர்களின் திருமணத்தில் கலந்துகொண்டேன் என சொல்லியுள்ளேன். அதைக்காட்டக்கூடிய புகைப்படம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நிச்சயதார்த்தத்தின்போது 30 பவுன் நகை தான் போட்டார்கள் என நான் சொல்வது பொய் எனவும், 100 பவுன் நகை போட்டார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எதற்காக விவாகரத்து நோட்டீஸ் அனுப்பினார் என்ற விபத்தை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஆனால் எதிர்மனுதாரர் பிரச்சனை செய்து வாழமுடியாது என பலமுறை கூறினார். அருண் அவரது சகோதரிக்கு காயக்றிகள் வாங்கிக்கொடுத்ததால் சண்டை போட்டுவிட்டு எதிர்மனுதாரர் சின்னமனூர் சென்று விட்டார். மேற்படி சம்பவம் 3 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. அருண் தகப்பனார் இறந்த இறப்புச்சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. இறப்பு குறித்து தகவல் சொன்னோம். மறுநாள் காலையில் 10.00 வந்து இறப்பில் கலந்துகொண்டு 11.00 மணிக்கு சென்றுவிட்டார். மனுதாரரின் தகப்பனார் சிகிச்சை எடுத்தது சம்மந்தமாக மருத்து ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. ஆனால் அவருக்கு இதய நோய் சம்மந்தமாக இருந்தது. நான் மனுதாரர் அருண்–க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அவர்கள் கணவர் மனைவிக்கிடையே நடந்த சண்டையை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல.